பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்
முன்னிலை: திரு.ச.ஸ்ரீராம்,

வவ.அ(வ.ஊ) | வவ.அ(கி.ஊ) | ஊ.ஒ.குழு தலைவர்

ந.க.எண்.618/2019/பஅ2 ~~0817~~ நாள்: 16.03.2020

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - பெரம்பலூர் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற தொகுதி-IV - தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுள் 4 நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்றது - பணிநியமனம் செய்யப்பட்ட 4 நபர்கள் பணியில் சேர்ந்துள்ளனர் - பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணியை வரன்முறை செய்து உத்தரவிடுதல்.

ஆட்சியர் அலுவலகம் 16 MAR 2020 பெரம்பலூர்

பார்வை:
1. சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடிதம் எண்.899/PSD-C3/2019, நாள்: 18.02.2019
2. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.918/2019-1,2,3&4/பஅ2, நாள்: 25.02.2019
3. ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரின் (வ.ஊ) கடிதம் ந.க.எண்.366/2019/அ1, நாள்: 04.10.2019
4. வேப்பந்தட்டை வட்டார வளர்ச்சி அலுவலரின் (வ.ஊ) கடிதம் ந.க.எண்.3690/2019/அ1, நாள்: 11.10.2019
5. பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலரின் (வ.ஊ) கடிதம் ந.க.எண்.515/2019/அ1, நாள்: 25.02.2020

------

உத்தரவு:

2015-2016, 2016-2017, 2017-2018 மற்றும் 2017-18 ஆண்டுக்கான தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பதவிக்கு நேரடி தெரிவின் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி-IV தேர்வு நடத்தப்பெற்று பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு தெரிவு செய்யப்பட்ட நான்கு நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் பார்வை 1-இல் காணும் கடிதத்துடன் வரப்பெற்றதைத் தொடர்ந்து, பார்வை 2-இல் காணும் செயல்முறைகளின்படி நான்கு நபர்களுக்கும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் மற்றும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகள் - விதி 10a(i) ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கிணங்க, முற்றிலும் தற்காலிகமாக இளநிலை உதவியாளர்-ஆக பணி நியமனம் செய்தும், பணிவாய்ப்பு அளித்தும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் உத்தரவிடப்பட்ட 4 நபர்கள் பணியில் சேர்ந்து நாளது வரை பணிபுரிந்து வருகின்றனர்.